SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம I பரீட்சை – ஜூலை 2021

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் I பரீட்சை – ஜீலை 2021

# (104) வணிகச் சூழல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**இருபது (20) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**பகுதி A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (2)

**1.2** (1)

**1.3** (4)

**1.4** (1)

**1.5** (4)

**1.6** (2)

**1.7** (3)

**1.8** (3)

**1.9** (1)

**1.10** (2)

***(02 புள்ளி வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)***

**1.11** பொய்

**1.12** உண்மை

**1.13** பொய்

**1.14** உண்மை

**1.15** பொய்

***(02 புள்ளி வீதம், மொத்தம் 10 புள்ளிகள்)***

**1.16. 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி கம்பனிகளின் வகைகள்**

- வரையறுக்கப்படாத கம்பனிகள்
- வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (வரையறுத்த தனியார் கம்பனிகள், வரையறுத்த பொது கம்பனிகள், கடல் கடந்த கம்பனிகள்

***(02 புள்ளிகள்)***

**1.17. பரிமாற்று ஊடகமாக தொழிற்படல் (A medium of Exchange)**

இது பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தில் ஒரு இடைத்தரகர்களாக செயல்படுவதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், எந்தவொரு பொருளும் அல்லது சேவையும் இன்னொரு பொருட்கள் சேவைகளுக்காக பணத்திற்காக பரிமாறப்படல். இது பணத்தின் முக்கியமான மற்றும் பாரிய தொழிற்பாடாக காணப்படுகிறது

***(02 புள்ளிகள்)***

**1.18. காசோலையை புறக்குறிப்பிடுதல் (Endorsement of Cheques)**

காசோலையில் குறிப்பிட்டபடி பெறுநர் தனது பெயரை காசோலைக்கு பின்னால் எழுதுவது ஆகும். கையொப்பம் இடவேண்டிய அவசியமில்லை பெறுநரின் பெயர் காணப்படவேண்டும். பெறுநர் இல்லாத ஒருவருக்கு மாற்றும்போது அவரதுபெயர் எழுதப்படவேண்டும். இங்கே காசோலையின் உரிமையை மாற்றுவதாகும், அல்லது உரிமையை ஒழிக்கவும் அதாவது பயனாளி அதன் தலைப்பை வேறொருவருக்கு மாற்றுகிறார்.

***(02 புள்ளிகள்)***

**1.19. பெண்ணியல் முயற்சியாண்மை எதிர்நோக்கும் சவால்கள்**

- அதிகளவிலான காலம் வீட்டு வேலைகளுக்கு செலவளிக்க வேண்டிய சூழல் ஏற்படல்
- சில சமூகங்களில் காணப்படும் பெண்களுக்கு எதிரான ஏற்றுக்கொள்ளாத மனநிலை
- பெண்களை முயற்சியாளராக ஏற்றுக்கொள்ளும் அமைப்புக்கள் குறைவு
- சில நாடுகளில் பெண்களுக்கு மட்டும் சில கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன
- அரசாங்கத்தின் ஊக்கத் துணை போதாமை.
- ஆணாதிக்கம் என்ற கருத்து வேரூன்றியுள்ளது.
- பாலின வேறுபாடு
- தோல்வி பற்றிய பயம்
- மூலதன பற்றாக்குறை
- நம்பிக்கையின்மை

***(02 புள்ளிகள்)***

aat SRI LANKA

**1.20. இலங்கை மத்திய வங்கியின் முக்கிய நோக்கங்கள்**

1) பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல்

2) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

***பிரிவு A முடிவு***

*(மொத்தம் 40 புள்ளிகள்)* **பிரிவு B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அலகு 01 I – வணிக அமைப்புக்கள்***

**(a) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் அம்சங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | உரிமை | பங்குதாரர்கள் உரிமையாளர்கள் ஆவர். |
| 2 | மூலதனம் | பங்குகளை வழங்குவதன் மூலம் மூலதனம் பெறப்படுகின்றது. பொதுப் பங்குகளை வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது மற்றும் சுதந்திரமாக கைமாற்ற முடியாது. |
| 3 | பங்குதாரர்களின் எண்ணிக்கை | குறைந்தபட்சம் 01, அதிகபட்சம் 50 |
| 4 | முகாமை | பணிப்பாளர் சபையால் நிர்வகிக்கப்படுகின்றது. குறைந்தபட்சம் 01 மற்றும் அதிகபட்ச எல்லை காணப்படவில்லை. |
| 5 | கட்டுப்பாடு | ஆளுகை என்பது நியதிச் சட்டரீதியான கட்டுப்பாடு மற்றும் பங்குதாரர்களின் கூட்டிணைந்த கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுள்ளது. |
| 6 | சட்ட ஆளுமை | சட்ட ஆளுமை கொண்டுள்ளது. |
| 7 | பொறுப்பு | பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. |
| 8 | தொடர்ச்சித்தன்மை | தொடர்ந்தியங்குதலில் பிரச்சினை எதுவும் இல்லை |
| 9 | கூட்டிணைப்பு | கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் சரத்துக்களின் அடிப்படையில் கூட்டிணைத்தல் கட்டாயமாகும் |
| 10 | கணக்கு வைப்பு மற்றும் கணக்காய்வு | கணக்கு வைப்பு மற்றும் கணக்காய்வு கட்டாயமாகும். ஆனால் கணக்குகளின் அறிக்கைகள் கோரப்பட்டால் மட்டுமே நிறுவனப் பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| 11 | வரி செலுத்துதல் | கம்பனியின் பெயரில் வரி செலுத்த வேண்டும். |
| 12 | கலைப்பு | பங்குதாரர் தானாக முன்வந்து தனியார் கம்பனியைக் கலைக்கலாம் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் நீதித்துறையின் மேற்பார்வையின் கீழ் கலைக்கலாம். |
| 13 | கம்பனியின் பெயர் | கம்பனியின் பெயரைக் குறிப்பிடும்போது, தனியார் கம்பனி என்ற சொற்பதம், மற்றும் “(Private) Limited” அல்லது “(Pvt) Limited” என்று சுருக்கமாக முடிவடையும். |
| 14 | கடன் செலுத்தும் சோதனைச் செயற்பாடு | கடன் திறனை பரீட்சிக்காது அனைத்து பங்குதாரர்களின் ஒப்புதலின் பேரில் பங்குலாபத் தொகை வழங்க முடியும். |
| 15 | தொடர்பினை ஏற்படுத்துவதற்கு பதிவேடுகளைப் பராமரித்தல் | பங்குதாரர்களின் ஒருமித்த தீர்மானங்களுக்கு அமைய, கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபடுகின்ற பதிவு விவரங்களை பணிப்பாளர் சபை பராமரிப்பதில் இருந்து தடுக்கலாம். |

*(04 புள்ளிகள்)*

**(b) தனியார் கம்பனிகளின் அனுகூலங்கள்**

1 உறவினர்களுடைய உரிமைகளை குடும்பத்தில் பராமரிக்கும் திறன் காணப்படுதல்.
2 வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களிடையே கம்பனியின் கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்ளும் திறன் காணப்படுதல்.
3 வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களிடையே இலாபங்களைப் பகிர்ந்து கொள்ளும் திறன் காணப்படுதல்.
4 அதிக மூலதனத்தை திரட்டும் திறன் காணப்படுதல்.
5 பொறுப்பு குறைவாகக் காணப்படுதல்.
6 சட்ட ஆளுமை கொண்டிருத்தல்.
7 பொது கம்பனிகளுடன் ஒப்பிடும்போது சட்டச் செல்வாக்கு குறைவாகக் காணப்படுதல்.
8 வணிகத்தின் தொடர்ச்சித்தன்மை காணப்படுதல் (தொடந்தியங்குதல்)
9 முகாமையில் ஈடுபடும் பயனுறுதியான முகாமைத்துவ சபை காணப்படுதல்.
10 அனைத்துப் பங்குதாரர்களுடன் ஏதேனும் ஒருமித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாது கம்பனியின் பெரும்பாலான பணிகளை நிறைவேற்றும் திறன் காணப்படுதல்.
11 கடனைப் பரீட்சிக்காமல் பங்குதாரர்களுக்கு பங்குலாபம் வழங்கும் திறன் காணப்படுதல்.
12 பல்வேறு வரிச் சலுகைகள் காணப்படுதல்.

*(03 புள்ளிகள்)*

**(c) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் அனுகூலங்கள்**

1 விரைவாகவும் சிறப்பாகவும் முடிவெடுத்தல்
2 உற்பத்தி திறன் அதிகரிப்பு
3 விருத்தியடைந்த வாடிக்கையாளர் சேவை
4 நிறுவனத்துடன் தொடர்புடையோருடன் சிறந்த தொடர்பை பேணல்
5 நிதிச்செயற்பாடுகளின் திறன் விருத்தியடைதல்
6 குறைந்தளவு நிர்வாக கிரயம்
7 குறைந்தளவு மேற்பார்வைக்கிரயம்
8 தகவல்கள் விரைவாக அனுப்புதல்/ பகிரப்படல் காரணமாக பணத்தையும் நேரத்தையும் சேமிக்க முடியும்.
9 சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படுவதால் அவற்றை வணிகத்திற்கான சந்தைப்படுத்தல் கருவியாகவும் பயன்படுத்த முடியும்.
10 வருடத்தின் ஒவ்வொரு நிமிடங்களிலும் எண்ணற்ற இணையத்தளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன.
11 கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்ள இதனை பயன்படுத்தலாம்
12 சரியான தீர்மானமெடுத்தலுக்கு இது உதவும்

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

***வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:***

| ***அலகு 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்*** |
|---|

**(a) தொடர்பாடலின் தடைகள்**

1 பௌதீக காரணிகள் - சத்தம் கலவரம் மற்றும் விபத்துகள்

2 முறைமை செயலிழப்புகள்- தரவு அமைப்பில் உள்ள இடைவெளிகள் இணைய சிக்கல்கள்

3 எதிர்மறை எண்ணங்கள்- நவீன தொழிநுட்பத்தை பற்றி ஊழியர்களுக்கிடையே காணப்படும் எதிர்மறை எண்ணங்கள

4 உளவியல் காரணிகள்- - தகவல் தொடர்பு நேரங்களில் வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு மனநிலைகளில் இருக்கலாம். எனவே அனைவருக்கும் சமமான செயல்திறனுடன் தொடர்பு கொள்ளவாய்ப்பில்லை.

5 மொழி மற்றும் கலாசார பல்லினத்தன்மை- புரிதலின்மை .

6 தொடர்பாடல் மேற்கொள்வோரின் சுகாதார உடல்நல கோளாறுகள்

***(03 புள்ளிகள்)***

**(b) காப்புறுதியின் நன்மைகள்**

1 ஏனைய நபர்களுக்கும் இடர் பகிர்ந்தளிக்கப்படல்

2 கட்டிடங்கள் , தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கு தீ மற்றும் ஏனைய விபத்துக்களால் ஏற்படும் நட்டங்களுக்கான இழப்பீடுகள் கிடைத்தல்

3 திருடர்களால் பொருட்கள் மற்றும் பணத்திற்கு ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு

4 கடன்பட்டோரிடமிருந்து பெறமுடியாத பற்றுசீட்டுகளுக்கான இடர் இழப்பீடு

5 உற்பத்தி , ஊழியர்கள் தொடர்பான பொறுப்பு காப்புறுதி மற்றும் பொதுப்பொறுப்பு காப்புறுதி

6 நாட்டில் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான முதலீட்டுக்கு உதவியளித்தல்.

7 வணிகங்களுக்கு முக்கிய பங்களிப்பை செய்கின்றது

8 சர்வதேச வர்த்தகத்தின் அபிவிருத்திக்கு உதவுகின்றது

9 நிச்சயமற்ற நிலைமைகளை தவிர்ப்பதற்கான ஒரு சிறந்த முதலீடு இதுவாகும்

10 நிதி இழப்பீடுகளை குறைக்க உதவுகின்றது

11 வணிகத்தை தொடர்ந்து மேம்படுத்தி கொண்டுசெல்ல உதவுகின்றது

12 வணிகத்தின் ஊழியர்களை பாதுகாக்கின்றது

13 ஊழியர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகின்றது

***(03 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(c) காப்புறுதியின் தத்துவங்கள்**

**1 காப்புறுதி செய்வதற்கான ஆர்வம் (Insurable Interest)**

இதன் பொருள் காப்பீடு செய்யபட்ட விடயத்திற்கு காப்பீட்டாளர் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

**2 அதி உச்ச நம்பிக்கை (Utmost Good Faith)**

இதன் பொருள், காப்பீட்டாளர் இருவருக்கும் பொருள் (கொள்கை ) தொடர்பான முக்கியமானதாகக் கருதப்படும் அனைத்து விடயங்களையும் பற்றி முழுமையான உண்மைகள் வழங்கப்படும். அதாவது இரு தரப்பினரும் எல்லா விடயங்களையும் வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையை அதி உச்ச நம்பிக்கை தத்துவம் என்று கூறுவார்கள்.

இந்த கொள்கை முக்கியமானது, ஏனென்றால் ''வாங்குபவர்கள் கவனமாக இருக்கவேண்டும்'' என்பது மற்ற பரிவர்த்தனைகளில் ஏற்றுக்கொள்ளபட்ட விடயமாகும்.

**3 இழப்பீட்டு தத்துவம்** (Indemnity)

குறிக்கப்பட்ட சொத்தானது சேதமடையும் பட்சத்தில் அந்த சொத்தின் பெறுமதியானது மட்டுமே நட்ட ஈட்டு கொடுப்பனவு மூலம் மீள்நிரப்படவேண்டும் . இது காப்புறுதி மூலம் இலாபம் உழைத்தலை தடுக்கிறது.

**4 பங்களிப்பு (Contribution)**

இது பங்களிப்புக்கான கொள்கையாகும், அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் சம்பந்தபட்ட சொத்தில் இழப்பு ஏற்பட்டால் ஒரே ஆபத்துக்கான (இரட்டை காப்புறுதி) காப்பீட்டு தொகையை பெற்றிருந்தால் அனைத்து காப்பீட்டு நிறுவனங்களும் கொள்கை மதிப்புக்கு ஏற்ப இழப்பீடு செலுத்த வேண்டியிருக்கும்.. இந்த தத்துவம் காப்புறுதியிலிருந்து கிடைக்கும் இலாபத்தை தடுக்கிறது மற்றும் ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடையது இல்லை

**5 அடிபணிதல் ( Subrogation)**

ஒரு சொத்து சேதமடைந்தால் இழப்பீடு கோருவது ஏற்பட்டால் இதன் பொருள் காப்பீடு செய்யபட்ட நபர் பிற தரப்பினரிடமிருந்து பெறக்கூடிய நன்மைகள் மற்றும் பிற உரிமைகளை காப்புறுதி செய்பவருக்கு மாற்றுவது. இந்த உரிமை அடிபணிதல் கடிதம் மூலம் காப்புறுதி செய்யபட்ட நபருக்கு வழங்கபடுகிறது. இது ஆயுள் காப்புறுதியை பாதிக்காது. மேலும் இந்த கொள்கையானது காப்பீட்டிலிருந்து இலாபம் உழைப்பதை தடுக்கிறது

**6 அண்மிய காரணிகள் (Proximate Cause)**

ஒதுக்கபட்ட சொத்து சேதமடையும் போது சேதம் அடைவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இதன் பொருள் மிக உடனடி காரணம் அல்லது அருகிலுள்ள காரணம் உங்கள் காப்புறுதி கொள்கைளில் உள்ளடக்கபட்டிருக்கலாம். சேதத்திற்கு முக்கியகாரணம் இந்த கொள்கையில் உள்ளடக்கபட்டிருக்க வேண்டும் என்பது ஆகும்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

***வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

***அத்தியாயம் 04 - வணிக அமைப்புக்களில் வியாபாரம்***

**(a)**

1. நீர்வழி – கப்பல்கள்
2. ஆகாய வழி – விமானங்கள்

*(02 புள்ளிகள்)*

**(b) இலத்திரனியல் வர்த்தகத்தின் நன்மைகள்**

1 எந்த நேரத்திலும் வணிகம் செய்வதில் உள்ள இயலுமை
2 ஆரம்பிப்பதற்கான கிரயம் குறைவாகும்.
3 சந்தையை விரிவுபடுத்தலாம்.
4 இடைத்தரகர்கள் குறைவு என்பதால் விலையின் மட்டம் குறைவாகும்
5 சந்தைப்பரப்பு மற்றும் வாடிக்கையாளர் பரப்பை விரிவுபடுத்த முடியும்.
6 புதிய பொருட்களை பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தல்
7 பொருட்களை தெரிவு செய்வதில் உள்ள வாய்ப்பு
8 ஆவணங்களின் பயன்பாடு குறைக்கப்படும்
9 வணிகத்தை துரிதப்படுத்தலாம்
10 மக்களுக்கிடையே பயன்பாடு இலகுபடுத்தப்படுத்தல்
11 வாடிக்கையாளர் நேரம் மற்றும் உழைப்பை சேமிக்க முடியும்

*(04 புள்ளிகள்)*

**(c) வெளிநாட்டு வியாபாரத்திற்கான முதற்தர ஆவணங்கள்**

| ஆவணங்கள் | நோக்கம் |
|---|---|
| விபரக்குறிப்பு விலைப்பட்டியல் | இறக்குமதியாளரால் உறுதிப்படுத்தபட்ட பொருட்கள் பற்றிய தகவல்களை வழங்க பொருட்களின் விலை, அளவு, போக்குவரத்து வகை ,சரக்கு செலவு மற்றும் விநியோக வகை, காப்பீடு மற்றும் ஏற்றப்பட்ட திகதி, பொருட்களின் எடை, பொதி செய்யும் வகைகள்,பெட்டிகளின் எண்ணிக்கை ,சலுகை விலை மற்றும் செல்லுபடியாகும் திகதி போன்ற தகவல்கள் இதில் இருக்கலாம் |
| வர்த்தக பட்டியல் | இறுதிவிலைப்பட்டியல், ஏற்றுமதியாளரால் மேற்கொள்ளப்படும் பொருட்களின் பெறுமதி மற்றும் பிற கட்டணங்களைத் தொடர்பு கொள்வது. |



aat SRI LANKA

| | |
|---|---|
| உற்பத்தி நாட்டின் சான்றிதழ் | வர்த்தகம் செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தி நாட்டை சரிபார்க்க. இது ஒப்பந்தம் மற்றும் கட்டண தேவைகளின் ஒரு பகுதியாக தேவைப்படலாம். |
| ஏற்றுமதி அனுமதி பத்திரம் (B/L) | பொருட்களில் கப்பல் செய்பவருக்கும் கொண்டு செல்பவருக்கும் இடையிலான ஒப்பந்தத்தை சரிபார்க்க இறக்குமதியாளருக்கு பொருட்களை உடைமையாக்குவதற்கு உரிமையின் சான்றாக மூலப்பிரதி அவசியமாகும் |
| காப்புறுதி சான்றிதழ் | சர்வதேச எல்லை வழியாக கொண்டு செல்லப்படும் பொருட்களை சரிபார்க்க போதுமான காப்புறுதி ஏற்பாடுகள் உள்ளன |
| சுகாதார சான்றிதழ் | சில பொருட்கள் ஏற்றுமதியாளார் நாட்டில் அங்கீகரிக்கபட்ட ஒழுங்குமுறை அமைப்பிலிருந்து அனுமதி தேவைப்படலாம்.<br>இது பொருட்களின் நிலையை உறுதிப்படுத்துகிறது. |
| முன்காப்பீட்டு படிவம் | ஏற்றுமதியாளர் சரிபார்க்க அனுப்பட்ட பொருட்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படக்கூடிய முழு ஆபத்தையும் ஏற்றுக்கொள்கிறார், எனவே சுத்தமான ஏற்றுமதி அனுமதிபத்திரத்தை வழங்குமாறு கப்பலை பணிப்பார். |

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 07 - முயற்சியாண்மையின் பங்களிப்பு***

**(a)**

| தொழில் முயற்சியாளர் | முகாமையாளர் |
|---|---|
| தனது சொந்த கருத்து மற்றும் சிந்தனைகள் மூலம் வணிகத்தினை ஆரம்பித்தவர் | சிந்தனைகள் மூலம் வணிகத்தினை ஆரம்பித்தவர்<br>வணிகமானது ஏற்கனவே நடைமுறையிலுள்ள கருத்துகளின் படியும் ஏற்கனவே உள்ள சிந்தனை படியும் ஆரம்பிக்கப்பட்டது. |
| வணிக போட்டியாளர் முயற்சியாளரே ஆகும். | மாற்று வணிக நிறுவனங்கள் போட்டி நிறுவனங்களாக கருதப்படும் |
| புதிய வணிக வாய்ப்புக்கள் மீது அவதானமாக இருப்பார் | ஏற்கனவே நடைமுறையிலுள்ள சொந்த வணிகத்தின் மீது கவனமாக இருப்பார் |
| புதுமை பித்தர் | பழைமைவாதியாக காணப்படுவார் |
| வணிகஆபத்துக்களை எதிர்கொள்ளுபவர் | பாதுகாப்புடன் வேலைசெய்பவர் |
| ஏதேனும் பிரச்சினைகளை எதிர்கொண்டால் கடினமாக உழைத்து அதிலிருந்து வெளிவருபவர். | பிரச்சினைகளை தவிப்பவர் மற்றும் அதிகரிப்பவர் |
| புதிய வணிக வாய்ப்புக்களை தேடுபவர் | ஏற்கனவே உள்ள வாய்ப்புக்களை பயன்படுத்துபவர் |

*(03 புள்ளிகள்)*

**(b)**

ஒரு சிறிய நடுத்தர முயற்சியாண்மையாக சமனின் வியாபாரத்தினை கீழ்வரும் வழிகளில் மேம்படுத்தலாம்.

- **<u>சூழலை ஏற்றதாக்குதல்</u>**

வணிக செயற்பாடுகளை இலகுவாக்கி அதன் மூலம் போட்டித்தன்மை மற்றும் சிறிய நடுத்தர உரிமங்களது அபிவிருத்திக்கு ஆதரவான சூழலை உருவாக்குதல் என்னும் நோக்கத்துக்காக இலங்கை அரசாங்கம் சட்டரீதியான, ஒழுங்குவிதிகள் சார்ந்த மற்றும் நிறுவன அமைப்புகள்சார் கட்டமைப்பு ஒன்றினை முறைசார்ந்த ஒழுங்கமைப்பு எளிமைப்படுத்தல் செயன்முறைகளின் ஒழுங்கமைத்தல் ஆகியன உள்ளடங்கலாக கொள்கையாக வகுத்துள்ளது.

- **<u>பொருத்தமான நவீன தொழில்நுட்பம்</u>**

அரசாங்கமானது நாட்டின் கலைகளை வெளிப்படுத்தும் நவீனமயமான பொருத்தமான சுத்-தமான தொழில்நுட்பத்தினை பெற்றுக்கொண்டு பின்பற்றுவதன் மூலம் சிறிய நடுத்தரஅளவு உரிமங்கள் தரம், புத்தாக்கம், உற்பத்தித்திறன் மிக்க மற்றும் போட்டி மிக்க உற்பத்திகள் ஆகிய விடயங்களில் விருத்தி அடைய உதவும். கைத்தொழில் துறை சார்ந்த கொள்கைவகுப்பு அறிவு அடிப்படையிலான தொழில்நுட்பச் செறிவான கைத்தொழில் உருவாக்கத்துக்கு அடிப்படையாக அமைவதுடன் பிராந்திய கைத்தொழில் மயமாக்கலினை நோக்காக கொண்டுள்ளது.

- **முயற்சியாண்மை கலாச்சாரம் மற்றும் திறன் அபிவிருத்தி**

அரசாங்கமானது முயற்சியாண்மை பகுதியினை மேம்படுத்தி வசதி அளித்து ஆதரவளிப்பதுடன் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்திறன் மற்றும் தொழிற்பயிற்சி பயிற்சியளித்தல் நிறுவனங்களில் இளைஞர்கள் மட்டும் பெண்களை இலக்காகக் கொண்டு திறமைகளை கட்டியெழுப்புவதுடன், அத்தகைய பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி முதலியன சிறிய நடுத்தரளவு உரிமங்களது அபிவிருத்திக்கான முயற்சியாண்மையினை ஏற்படுத்தி நிறுவனக்கட்டமைப்புகளை பலப்படுத்துவதன் மூலம் உதவ முடியும்.

- **நிதி கிடைப்பனவு வசதியளித்தல்**

அரசாங்கம் சிறிய நடுத்தர அளவு உரிமங்களுக்கான வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் ஊடான நிதி மூலங்களை இலகுவான மற்றும் தாங்கக்கூடிய நிதிப்பொறிமுறைகளுக்கான கட்டமைப்பினை அளித்து ஆதரவளிக்க வேண்டும். ஒவ்வொரு வங்கியும் சிறிய நடுத்தர அளவு உரிமங்களது மீள்நிதியிடல் திட்டங்களுக்கு கடன் வசதி அளிக்கும் வகையில் சிறிய நடுத்தர அளவு உரிமங்களுக்கான பிரிவு ஒன்றினை பேணுதல் வேண்டும். மேலும் ஏஞ்சல்



aat SRI LANKA

நிதியங்கள் மற்றும் மூலதன முயற்சி ஏற்பாடுகள் முதலியன இலங்கையில் சிறிய நடுத்தர அளவு உரிமங்களை பலப்படுத்தும்.

- **சந்தைப்படுத்தல் வசதியளித்தல்**

அரசாங்கமானது சர்வதேசமயமாக்கலின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், சிறிய நடுத்தர அளவு உரிமங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை அணுகுவதற்கு ஆதரவான வசதிகளை வழங்கும்.

- **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

அரசாங்கம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அல்லது கிரய விளைதிறன் மிக்க தொழில்நுட்பங்கள், புத்தாக்கம் மற்றும் சந்தை நோக்கிலான புதிய வடிவமைப்புகள் அடிப்படையிலான உற்பத்தி விருத்தி, செயன்முறை விருத்தி, உற்பத்தித் திறன் மேம்படுத்தல் மற்றும் போட்டித் தன்மையின் அதிகரிப்பு ஆகியன வலுமிக்க செயன்முறை என ஏற்றுக்கொண்டுள்ளது.

- **வளங்களின் வினைத்திறன்**

வளங்களின் வினைத்திறன் அவனது சிறிய நடுத்தர அளவு உரிமங்களை போட்டித் தன்மையை மேம்படுத்தும், கிரய சேமிப்பை ஏற்படுத்தி இயற்கை சூழலை பாதுகாப்பதன் மூலம் எதிர்கால அபிவிருத்திக்கான நீடித்து நிலைக்கக்கூடிய அடிப்படையினை உருவாக்குவதற்கு ஓர் முக்கியமான தளம் என அங்கீகரித்திருக்கிறது.

- **பிராந்திய சமத்துவம்**

வேறுபட்ட ஊக்குவிப்புத் திட்டங்கள் ஊடாக அரசாங்க மற்றும் தனியார் துறை நிதிசார் மற்றும் நிதிசாராவணிக அபிவிருத்தி சேவை வழங்குநர்கள் அது கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளை மேம்படுத்தி ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தித் தந்திரோபாயம் மூலமான சமப்படுத்தப்பட்டபிராந்திய வளர்ச்சி ஓர் முக்கியமான விடயம் என அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. கிடைக்கத் தக்கதாகவுள்ள தகவல்கள் மற்றும் சேவைகளை தேசிய மொழிகளில் (சிங்களம் மற்றும் தமிழ்) கிடைக்கச் செய்தல், சிறிய நடுத்தர அளவு உரிமங்கள் இடையேயான கிடைக்கத்தக்கமட்டும் பயன்மிக்க வணிக அபிவிருத்தி சேவைகள் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம், சிறியநடுத்தர அளவு உரிமங்கள் மற்றும் பாரிய வணிகங்கள் இடையேயான தொடர்பு, வெளிநாட்டுநேரடி முதலீடுகள் மற்றும் முதலீட்டு சபை கம்பனிகள் முதலியன தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், தற்போதைய மற்றும் புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்குதல்

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(c)**

1 மூலதன சந்தை ஒன்றிலே, வேறுபட்ட துறைகளிலிருந்து சேமிப்புகளை நகர்த்துவதற்கு

2 நிறுவனங்களுக்கு நிரந்தர மூலதனம் திரட்ட உதவும்

3 பொருளாதாரத்தின் கைத்தொழில் துறைக்கு வளங்கள் மாற்றப்படும் ஒரு மைய சந்தையாக பங்குப் பரிவர்த்தனை காணப்படுகிறது. இத்தகைய நிறுவனங்களின் காணப்படுகை மக்கள் உற்பத்தித்திறன் மிக்க வகையில் முதலீடு செய்வதனை ஊக்குவிக்கிறது.

4 செயற்திறனுக்கான நம்பகமான வழிகாட்டி
மூலதன சந்தையானது கூட்டுவணிக நிறுவனங்களின் செயற்திறன் மற்றும் நிதிநிலைமைக்கான நம்பகமான வழிகாட்டியாக தொழிற்படுவதுடன் வினைத்திறனை மேம்படுத்துகிறது.

5 நிதிகளின் பொருத்தமான பாய்வு
தற்போது காணப்படும் பிணையத்தின் விலை மற்றும் ஒப்பீட்டளவிலான வருமானம் ஆகியன மக்கள் தமது நிதிகளை கம்பனிகளில் முதலீடு செய்வதை வழிகாட்டும் காரணிகளாகும். இது பொது நன்மைக்காக நிதிகள் பயனுறுதி மிக்க முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்யும்.

aat SRI LANKA

6 பின்னடைவான பிராந்தியங்களுக்கான அபிவிருத்திக்கு நிதியளித்தல்
7 வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் மூலதனங்களையும் கவர்வதற்கான வழிகளை உருவாக்கல்

8 தயாரான மற்றும் தொடர்ச்சியான சந்தை (ீசநியசநன யனெ ஊழவெைரழரள ஆயசமநவ) பங்குப் பரிவர்த்தனையானது கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இலகுவாக பிணையங்களை கொள்வனவு விற்பனை செய்வதற்கான மத்திய வசதியை வழங்குகிறது. இலகுவாக சந்தைப்படுத்தும் தன்மையானது பிணையங்கள் மீதான முதலீட்டினை ஏனைய சொத்துக்களுடன் ஒப்பிடும்போது மிகவும் திரவத் தன்மை மிக்கதாக மாற்றுகின்றது.

9 நிதிச் சந்தையில் தொழிற்படும் நிதியியல் நிறுவனங்கள் முயற்சியாளர்களுக்கான நீண்ட கால கடன்கள் மற்றும் நடுத்தரகால கடன்கள், குறைத்து எழுதும் வசதிகள்,கம்பனிகளின் உருவாக்கத்திற்கான உதவிகள், உரிமை மூலதனத்தின் மீதான பங்குபற்றுதல் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குதல் முதலிய வேறுபட்ட சலுகைகளை வழங்குகின்றன.

10 இரண்டாம் நிலை சந்தையின் உதவியுடன் முதலீட்டாளர்கள் தமது பங்கு இருப்பினை விற்பனை செய்து திரவத் தன்மை மிக்கதாக மாற்றிக் கொள்ள முடியும். வர்த்தக வங்கிகள் முதலீட்டாளர்கள் நமது பணத் தேவைகளின் போது, தமது வைப்புகளை மீளப்பெறவும் வசதி அளிக்கிறது.

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

*பிரிவு **B** முடிவு*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அலகு 05 - வணிகத்தின் மீதான அரசின் செல்வாக்கு, வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பு***

**(a)**

1 **வேலைவாய்ப்புகளுக்கு பங்களித்தல் / தொழில்வாய்ப்புகளை வழங்குதல்**

Happy Super எனபது இலங்கையில் 300ற்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களைக்கொண்ட பல்பொருள் அங்காடி சங்கிலியாகும். இங்கு மனிதவளங்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன மற்றும் பண்ணைகளில் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கவும் இது மறைமுகமாக உதவுகின்றது.

2 **உள்ளூர் வளங்களை பயன்படுத்தல்**

Happy Super பால் பண்ணையாளர்களுக்கும் காய்கறி உற்பத்தியாளர்களுக்குமான வலையமைப்பை தொடங்கியதன் காரணமாக அவர்கள் தமது புதிய காய்கறிகள் மற்றும் பாற்பொருள் உற்பத்திகளை அருகிலுள்ள விற்பனை நிலையத்தினூடாக விற்பனை செய்ய முடியும். ஆகவே நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முழுவேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு அதிகளவிலான பங்களிப்பு இவற்றின் மூலம் வழங்கப்படுகின்றது

3 **சூழல் பாதிப்பை குறைத்தல்**

ஒவ்வொரு வணிகங்களும் அவற்றின் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்களின்போது சுற்றுச்சூழல் பாதிப்புக்களை குறைத்து சூழலுக்கு இணைந்ததாக பயணிக்கின்றன. Happy Super விவசாயிகளுக்கு சேதன உரங்களை வழங்க திட்டமிட்டுள்ளதுடன் மேலும் அவர்களின் விற்பனை நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை பயன்படுத்தி CSR திட்டத்தின் ஒரு பகுதியாக சேதன உரங்களை தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளது.

4 **அரசாங்கத்தின் கொள்கைகளை பின்பற்றுதல்**

அரசாங்கம் அவ்வப்போது செயற்படுத்தும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வணிக நிறுவனங்கள் கடமைப்பட்டுள்ளன. இதன் விளைவாக அரசாங்கத்தின் நிதிக்கொள்கை மற்றும் பொருளாதாரத்தில் தொடர்புடைய பிற கொள்கைகளை செயற்படுத்துவதில் தொழில்முனைவோர் பெரும் பங்களிப்பினை வழங்குகின்றனர். Happy Super நிறுவனம் அரசாங்கத்தின் கொள்கைக்கு முன்னுரிமையளித்து சேதனப்பசளை உற்பத்தியை சிறந்த முறையில் நடாத்தி செல்ல திட்டமிட்டுள்ளது.

aat SRI LANKA

5 **பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்**

Happy Super நிறுவனம் பண்ணை உற்பத்தியாளர்கள் உண்மையான வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலுகின்றது. பண்ணை உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படும் உயர்வானது பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும்.

6 **நியாயமான வருமானக்கொள்கையை உருவாக்குதல்**

Happy Super நிறுவனம் நாடளாவிய ரீதியில் சிறியளவு காய்கறி உற்பத்தியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் வலையமைப்பை கொண்டுள்ளது . சிறு காய்கறி உற்பத்தியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் வறுமையை குறைப்பதற்காக திட்டங்களை உருவாக்கி அதன்மூலம் அவர்களின் வருமானத்தை அதிகளிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

7 **நிலையான அபிவிருத்தி**

Happy Super நிறுவனம் சேதன பசளை உற்பத்தியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சூழல் பாதுகாப்பு மற்றும் எதிர்கால சந்ததியினரின் சுகாதாரமும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

8 **முறையாக வரி செலுத்துதல்**

நிறுவனங்கள் தமது வருமானம் மற்றும் இலாபத்திற்கு முறையான வரியை பிழையின்றி முறையாக செலுத்துவதன் மூலம் அரசாங்கம் தனக்குரிய பங்கை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி அதன்மூலம் கிடைக்கப்பெறும்.

9 **விதிகளுக்கு கட்டுப்படுதல் மற்றும் கடைபிடித்தல்**

அரசாங்கம் செயற்படுத்தும் கொள்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளை வணிக நிறுவனங்கள் கடைபிடித்து கட்டுப்பாட்டுடன் செயற்படுவது ஒரு நல்ல வணிக சூழலை உருவாக்க உதவும்.

***(05 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(b)** PESTEL ஆனது நிறுவனத்தின் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தும் புறக்காரணிகளை ஆய்வு செய்யும் ஒரு கருவியாகும். இது பேரின சூழலின் அரசியல் பொருளாதாரம் சமூக கலாச்சாரம் தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் மற்றும் சட்ட திட்டங்கள் போன்ற சூழல் சக்திகளை குறிக்கின்றது. இங்கு தரப்பட்டுள்ள தகவல்களின்படி வெளியக வணிகச்சூழலின் போக்குகள் மற்றும் சக்திகள் Happy Super நிறுவனத்திற்கு சாதகமாகவே அமைந்துள்ளன என்பதை மதிப்பிடலாம்.

- **அரசியல் சூழல்**

Happy Super நிறுவனம் அரசாங்கத்தின் கொள்கைக்கு முன்னுரிமையளித்து சேதனப்பசளை உற்பத்தியை சிறந்த முறையில் நடாத்தி செல்ல திட்டமிட்டுள்ளது. இது ஒரு சாதகமான நிலைமையாகும்.

- **பொருளியல் சூழல்**

இது நுகர்வோரின் கொள்வனவு சக்தி வருமான மட்டம் உற்பத்தி மற்றும் விலைமட்டம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. Happy Super அரசின் பொருளாதார திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து நாட்டின் எதிர்கால தேவையை கருதி தமது விற்பனை நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை பயன்படுத்தி சேதன உரங்களை தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளது. இதுவும் ஒரு சாதகமான நிலைமையாகும்.

- **சுற்றுச்சூழல்**

Happy Super தமது கழிவகற்றல் முறைகளை சூழல் நட்புறவுடன் மேற்கொள்ளும் அதேநேரம் இயற்கை பாதுகாப்பையும் உறுதிசெய்வதால் இது ஒரு சாதகமான நிலைமையாகும்.

- **சமூக கலாச்சார சூழல்**

மக்களின் உள்ளார்ந்த நன்மைகள் நம்பிக்கைகள் பெறுமதிகள் என்பவற்றின் அடிப்படையில் Happy Super மக்களின் நன்மை கருதி சேதனப்பசளை உற்பத்தி தீர்மானத்தை எடுத்திருத்தல் ஒரு சிறந்த முயற்சியாகும்.

- **தொழிநுட்ப சூழல்**

Happy Super நிறுவனம் தேவையான தொழில்நுட்பங்களுக்கான முதலீட்டை மேற்கொண்டு கைத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப சாதனங்கள் அறிவு மற்றும் பயிற்சியை வழங்குகின்றது.

- **சட்டச்சூழல்**

சேதன உரம் மற்றும் பிராந்திய சமனிலையை பேணுவதற்காக அரசாங்கம் உரிய நிறுவன கட்டமைப்பை உருவாக்கி அதற்கான சட்ட திட்டங்களை அமுல்படுத்தும் என்பதால் இது சாதகமற்றதாக காணப்படுகின்றது.

***(06 புள்ளிகள்)***

***அலகு 05 - வணிகத்தின் மீதான அரசின் செல்வாக்கு, வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பு***

**(c)**

1. வணிகத்திற்கு சமூகத்தில் ஆதரவு மற்றும் அங்கீகாரம் கிடைக்கும்
2. வணிகம் தொடர்பான விம்பம் விரிவடையும்
3. எதிர்காலத்தில் சாத்தியமான பங்குதாரர்களை இணைத்துக்கொள்ள முடியும்
4. வணிகங்கள் நட்புறவோடு துறைரீதியாக ஒன்றோடொன்று சார்ந்திருத்தல்
5. சமூகப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதன் காரணமாக குறைவான அரச கட்டுப்பாடுகள்
6. வரி விலக்களிப்புகள் / வரிச்சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும்
7. சிறந்த வணிகச்சூழலை கொண்டிருப்பதனால் வணிகங்கள் தமக்கான உள்ளீடுகள் மற்றும் சந்தையை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

***(03 புள்ளிகள்)***

***அலகு 05 - வணிகத்தின் மீதான அரசின் செல்வாக்கு, வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பு***

**(d)** வணிகங்கள் சூழல் நட்புறவோடு தமது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலானது நிலைபேறான சுற்றுச்சூழலை உருவாக்குவதோடு எதிர்கால சந்ததியினர் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய சூழலை உருவாக்கும். இது வணிகங்களுக்கும் சூழலுக்கும் இடையிலான நீண்டகால உறவிற்கான இணைப்பு பாலமாக கருதப்படலாம். Happy Super நிறுவனம் கீழ்க்குறித்த விடயங்களில் நிலைபேறான சூழல் அபிவிருத்திக்கு பங்களிப்பதற்காக இணைந்துள்ளது.

- விவசாயிகளுக்கு சேதனப்பசளையை விநியோகித்தல்
- தமது விற்பனை நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை பயன்படுத்தி சேதன உரங்களை தயாரித்தல்
- கைத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து விவசாயிகளுக்கு அறிவு மற்றும் பயிற்சியை வழங்குகின்றது.
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கான வலையமைப்பை நிறுவி போக்குவரத்தின் போது உணவு வீணாகுதலை தவிர்த்தல் மற்றும் இடைத்தரகர்கள் தரகு உழைப்பதை தடுப்பதன் மூலமும் உயர் வருமானத்தை விவசாயிகளுக்கும் பால் உற்பத்தியாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்க முடியும்.
- எந்தவொரு நிலப்பகுதியிலும் சூழல் மாசடையக்கூடிய செயற்பாடுகளை தவிர்த்தல்

aat SRI LANKA

- நாட்டின் கலாச்சாரத்தை சீர்குலைக்கும் எந்தவொரு செயலையும் செய்யாதிருத்தல்
- உயிர்ப்பல்வகைமையை அழிக்கும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாமல் இருத்தல்
- இயற்கையான சுற்றுச்சூழல் வலயங்களை அழித்தல் மூலமாக பெறப்படும் வருமானங்களை குறைத்தல்.

*(04 புள்ளிகள்)*

***அலகு 07 - முயற்சியாண்மையின் பங்களிப்பு***

**(e) தொழில் முயற்சியாளர் ஒருவருக்குத் தேவைப்படும் தொழில் முயற்சியாண்மை திறன்கள்**

- தலைமைத்துவ திறன்கள்
- தனிப்பட்ட திறன்கள்
- தொடர்பாடல் திறன்கள்
- அடிப்படை முகாமைத்துவ திறன்கள்
- கருத்துருவாக்க திறன்கள்
- தத்துவ திறன்கள்

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

***பிரிவு C முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*